**புத்தசாசன நிதியம் - 2016**

புத்தசாசன நிதியத்தின் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஐந்தொகை மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானச் செலவினக் கணக்கு, நிதிய மாற்றங்கள் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1990 இன் 35 ஆம் இலக்க புத்தசாசன நிதிய அதிகாரச்சட்டத்தின் 12(4) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(3) ஆம் உறுப்புரையில் உள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. மேற்படி நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இவ்வறிக்கையில் காண்பிக்கப்பட்டுள்ளன.

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 மார்ச் 02 ஆந் திகதி வரையில் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாமையினால் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய மீளாய்வாண்டிற்கான கொடுக்கல் வாங்கல் அறிக்கை யொன்று 2018 பெப்ரவரி 16 ஆம் திகதி பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்டது. எனினும், மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்கள் 2020 ஒக்டோபர் 07 ஆந் திகதி சமர்ப்பிக்கப்பட்டிருந்தமையால் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரச அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையின் பிரகாரம் என்னால் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டியதெனக் கருதப்படும் மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்கள் சம்பந்தமான எனது அவதானிப்புக்கள் இவ்வறிக்கையில் காண்பிக்கப்பட்டுள்ளன.

## 1.2 நிதிக் கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந் நிதிக்கூற்றுக்கள் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமை நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமை பொறுப்பாக உள்ளது.

## 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் நிதிக்கூற்றுக்கள் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். உயர் கணக்காய்வு நிறுவனத்தின் சர்வதேச கணக்காய்வு நியமங்களுக்கு ஒத்ததாக (ISSAI 1000 – 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்க நெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களில் உள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் நிதியத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாக சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்திற் கொள்கின்றாரேயன்றி நிதியத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக கருத்திற்கொள்ளவில்லை. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்

தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டு மொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.4 முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

**2. நிதிக்கூற்றுக்கள்**

**2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து புத்தசாசன நிதியத்தின் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

**2.2.1 கணக்கீட்டு குறைபாடுகள்**

வங்கி முதலீடுகள் மற்றும் திறைசேரிப் பத்திரங்களுக்கான மீளாய்வாண்டிற்கான வட்டி வருமானம் ரூபா 4,407,978 குறைத்துக் கணக்கிடப்பட்டிருந்தது.

**2.2.2 கணக்காய்விற்கான சான்றுகளின்மை**

கணக்குகளில் குறிப்பிடப்பட்ட கீழே காட்டப்பட்டுள்ள ஒவ்வொரு விடயங்களுக்கும் எதிரில் காட்டப்பட்டுள்ள சான்றுகள் சமர்ப்பிக்கப்படாத காரணத்தினால் கணக்காய்வின் போது இவற்றை திருப்திகரமாக உறுதிப்படுத்தவோ அல்லது ஏற்றுக்கொள்ளவோ முடியாதிருந்தது.

| | **விடயம்** | **தொகை** | **சமர்ப்பிக்கப்படாத சான்றுகள்** |
|---|---|---|---|
| | | **ரூபா** | |
| (i) | பௌத்த தர்ம நூல்கள் | 11,605,348 | பொருட் கணிப்பீட்டு அறிக்கைகள் |
| (ii) | சுனாமி நிவாரணம் | 1,348,796 | விபரமான தகவல்கள் |
| (iii) | முற்பணம் மற்றும் ஏனைய பெற வேண்டிய தொகை | 13,031,848 | மீதி உறுதிப்படுத்தல் மற்றும் காலப்பகுப்பாய்வு |
| (iv) | நடைமுறைப் பொறுப்புக்கள் | 1,712,435 | மீதி உறுதிப்படுத்தல் மற்றும் காலப்பகுப்பாய்வு |
| (v) | நிலையான சொத்துக்கள் | 10,452,259 | நிலையான சொத்துப் பதிவேடு |
| (vi) | சொத்துக்களுக்கான தேய்மானம் , விற்பனை மற்றும் செலுத்த வேண்டிய படிகள் கணக்குகளுக்கான மாற்றங்கள் | 3,630,939 | நாளேட்டுப் பதிவுகள் மற்றும் அதற்கான உறுதிச்சீட்டுக்கள். |

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் படி, மீளாய்வாண்டிற்கான திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதியத்தின் நிதி விளைவுகள் ரூபா 25,852,041 மிகையாக இருந்ததுடன், அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மிகை ரூபா 27,945,573 ஆக இருந்தமையால் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டின் நிதி விளைவுகள் ரூபா 2,093,532 தொகையினால் வீழ்ச்சியடைந்திருந்தது. முதலீட்டு வட்டி வருமானம் உள்ளடங்கலாக மொத்த வருமானம் ரூபா 634,813 இனால் குறைவடைந்தமை மற்றும் செலவினம் ரூபா 2,728,345 இனால் அதிகரித்தமை என்பன இவ்வீழ்ச்சிக்குப் பிரதானமாக தாக்கமளித்திருந்தன.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டில் ரூபா 35,038,436 ஆனது நிதியத்தின் வருமானமாகப் பெறப்பட்ட போதிலும் அதில் ரூபா 9,186,395 அதவாது நூற்றுக்கு 26 வீதம் மட்டும் நிதியத்தின் நோக்கங்களுக்காகக் செலவிடப்பட்டிருந்தது. மேலும் வருடாந்த மிகைப் பணம் முதலீடு செய்யப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியில் மொத்த முதலீட்டுப் பெறுமதி ரூபா 483,767,200 ஆகும். புத்த சாசனத்தைப் பாதுகாத்தல் மற்றும் போதித்தல் தொடர்பாக இது போன்ற கருத்தில் மிகவும் பொருத்தமான செயற்பாடுகளுக்குப் பணத்தைப் பயன்படுத்துவதே நிதியத்தின் செயற்பாடுகளாக இருந்த போதிலும் வருடாந்தம் நிதியத்திற்கு கிடைக்கும் வருமானத்தில் அவ்வாறான திட்டங்களைச் செயற்படுத்துவதற்கு நிதியம் தவறிவிட்டது.

(ஆ) நிதியத்திற்குச் சொந்தமான அனுராதபுரம் பஸவக்குளம் பிரதேசத்தில் அமைந்துள்ள 2 ஏக்கர் 1 றூட் 13 பேர்ச்சஸ் ஆன காணி மற்றும் அதில் நிர்மாணிக்கப்பட்ட கட்டிடம் 1994 ஆகஸ்ட் 15 ஆந் திகதி வரையறுக்கப்பட்ட ஸ்ரீ அனுராதபுர அமத்யாபன சங்ரகச் சங்கத்திற்கு ரூபா 50 ஆன வருடாந்த குத்தகை வாடகைக்கு குத்தகைக்கு விடப்பட்டது. குத்தகை ஒப்பந்தத்தின் (கா) பிரிவின் பிரகாரம் குத்தகைக்கு விடப்பட்ட காணி அமைந்துள்ள பிரதேசத்தில் உள்ளூராட்சி நிறுவனம் அல்லது மாகாண சபையினால் செய்யப்படுகின்ற வருடாந்த காணி மதிப்பீட்டைக் கருத்திற் கொண்டு குத்தகை வாடகையை மீளத்திருத்துதற்கான அதிகாரம் குத்தகையாளருக்கு காணப்படுவதுடன் 2014 ஆம் வருடத்தின் மதிப்பீட்டறிக்கையின் பிரகாரம் இக் கட்டடிடத்தின் சந்தைப் பெறுமதி ரூபா 10,500,000 ஆக காட்டப்பட்டிருந்த போதிலும் குத்தகை வாடகையை மீள் திருத்துவது தொடர்பாக கவனம் கோரப்பட்டிருக்கவில்லை.

## 5. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின்போது அவதானிக்கப்பட்ட குறைபாடுகள் தொடர்பாக அவ்வப்போது நிதியத்தின் செயலாளருக்கு அறிவிக்கப்பட்டிருந்ததுடன், கீழே காட்டப்பட்டுள்ள கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) நிதியங்களின் முதலீடு மற்றும் பயன்பாடு
(ஆ) கணக்கீடு
(இ) நோக்கங்களின் பிரகாரம் செயலாற்றல் மட்டம்
(ஈ) பாதீட்டுக் கட்டுப்பாடு